மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

6—

பறவைகள் சரணாலயம்

***24367—திரு. டி.ஆர்.பி. ராஜா:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடுவூர் பறவைகள் சரணாலயத்தினைப் புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆம். மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட வடுவூர் பறவைகள் சரணாலயத்தில் ஆண்டுதோறும் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி தொகுதி, வடுவூர் பறவைகள் சரணாலயம் தமிழகத்திலே உள்ள மிக முக்கியமான சரணாலயங்களில் ஒன்றாகும். தினந்தோறும் பல சுற்றுலாப் பயணிகள் இங்கு வந்து செல்லும் நிலையில் இங்கே குடிநீர் வசதிகூட இல்லாத ஒரு அவல நிலை இருந்து வருகிறது. மேலும், இங்கே அமைந்துள்ள பார்வையாளர்கள் மாடம் மிகவும் பழுதடைந்து அபாயகரமான நிலையில் உள்ளது. ஆகவே, இந்த வடுவூர் பறவைகள் சரணாலயத்தை அரசு உடனடியாக புனரமைப்பு செய்யுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

2013 பிப்ரவரி 5]

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுகாவிற்குட்பட்ட, வடுவூர் ஏரியை அரசாணை எண் 129 சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 22–7–1993–ன்படி 128 ஹெக்டேர் பரப்பளவில் வடுவூர் பறவைகள் சரணாலயம் அமைக்க ஆணையிடப்பட்டது. பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள குளம் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமானது. இப்பறவைகள் சரணாலயத்திற்கு ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை 22,750 எண்ணிக்கையிலான, 40 வகையான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பறவைகள் வந்து தங்கி, முட்டையிட்டு, குஞ்சு பொறித்து தங்கள் இருப்பிடத்திற்கு திரும்பிச் செல்கின்றன. இந்தப் பறவைகளைப் பார்த்துச் செல்வதற்கு உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் 6,000 முதல் 8,000 பார்வையாளர்கள் பார்வையிட வந்து செல்கின்றனர். பார்வையாளர்கள் சரணாலயத்தைப் பார்வையிட கண்காணிப்புக் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் 2011–2012 ஆம் ஆண்டில் ரூ.9.00 இலட்சமும், 2012–2013–ல் ரூ.10.26 இலட்சமும் ஒதுக்கப்பட்டு அங்கே மேம்பாட்டுப் பணிகள் நடைபெறுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆணையிட்டுள்ளது. மேற்படி மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல் அல்லாமல் அங்கே பார்வையாளர்கள் செல்கின்ற கோபுரங்களில் உள்ள பழுதெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே சீரமைக்கப்பட்டுள்ளது என்பதைத் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் அந்தக் கோபுரங்கள் சீரமைக்கப்படவில்லை. அதனால்தான் நான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். வடுவூர் ஏரி ஒரு சரணாலயமாக மட்டுமல்லாமல், ஏறத்தாழ 10,000 ஏக்கர் நிலங்களுக்கு பிரதான பாசன ஏரியாகவும் திகழ்கிறது. இது பறவைகள் சரணாலயமாக இருக்கும்பட்சத்தில், இதற்கு மத்திய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகத்திலிருந்து அனுமதி பெற்றுத்தான் தூர் வாருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்று

தெரிகிறது. ஏரியின் நீர் மட்டம் 1.98 மீட்டரிலிருந்து தூர்ந்துப்போய் இப்போது கிட்டத்தட்ட ஒரு மீட்டர் அளவிற்குத்தான் உள்ளது. ஆகவே, பறவைகளுக்காகவும், அதைவிட முக்கியமாக எங்கள் பகுதி விவசாயிகளுக்காகவும், அந்த ஏரியை உடனடியாகத் தூர் வாருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தோடு பேச்சுவார்த்தை நடத்தி அனைத்துவித அனுமதிகளையும் விரைந்துப் பெற்றுத் தருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடுவூர் பறவைகள் சரணாலயத்தில் உள்ள ஏரியை சீர்படுத்துவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு 2012–2013 ஆம் நிதி ஆண்டில் ரூ.10.26 இலட்சம் நிதியை ஒதுக்கி, அந்த ஏரியைத் தூர் வாரும் பணி தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மணிமாறன், மாண்புமிகு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

7—

சிறுபாலம்

***5997—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூந்தமல்லி தொகுதி, தாமரைப்பாக்கம், வெங்கல், அமணம்பாக்கம் கூட்டுச் சாலையில் (செங்குன்றம்–திருவள்ளூர் சாலை) சிறுபாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?